

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (23.12.2024) கொளத்தூரில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 25 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில், எவர்வின் பள்ளி குழுமத்தின் தலைவர் முனைவர் பி. புருஷோத்தமன் தான் எழுதிய "The Heart and Art of Teaching என்ற நூலினை வழங்கினார். உடன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (23.12.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நாடாளுமன்ற உறுப்பினரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளருமான தயாநிதிமாறன் சந்தித்து, தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கடந்த அக்டோபர் 24ஆம் தேதி சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ விளையாட்டு மைதானத்தில் மார்பகப் புற்றுநோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 231 இருசக்கர வாகனங்களில் நடைபெற்ற பேரணியை அங்கீகரித்து Asian Book of Records விருது வழங்கப்பட்டதை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் துணை செயலாளர்கள் கௌதமன், செல்வி நிவேதா ஜெசிகா, கார்த்திக், சுரேஷ் மனோகரன், வாசிம் ராஜா ஆகியோர் உள்ளனர்.

### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் – பள்ளிகளில்

# ரூ.99.68 கோடியில் 400 வகுப்பறைக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, டிச. 24–

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் ரூ.99.68 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 400 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 9 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்து, அலுவலர்களின் பயன்பாட்டிற்காக ரூ.8.46 கோடி மதிப்பிலான 95 வாகனங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.12.2024) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் தமிழ்நாட்டின் 21 மாவட்டங்களில் 64 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 400 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 6 மாவட்டங்களில் 35 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், என மொத்தம் 99 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவிலான கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 8 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 95 வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முக்கிய நோக்கமாகும். அதன்படி, ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வழங்குதல், சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்தி, உட்கட்டமைப்புகளான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஊரகச் சந்தைகள், உணவு கிடங்குகள் போன்றவற்றை ஏற்படுத்தி, புதிய ஊரக வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி அதனை திறம்பட செயல்படுத்தி, தமிழ்நாடு அரசு நாட்டிலேயே முன்னோடியாக விளங்கி வருகிறது.

**புதிதாகக் கட்டப்பட்டுள்ள 400 வகுப்பறைக் கட்டடங்களை திறந்து வைத்தல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (CFSIDSI) கீழ், கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், இராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 171 பள்ளிகளில் 56.11 கோடி ரூபாய் செலவில் 350 புதிய மற்றும் கூடுதல் வகுப்பறைகள்;

அரசுப் பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் ஒட்டுமொத்த தூய்மைக்கு புத்துயிர் அளித்தல் (RBIOCGS) திட்டத்தின் கீழ், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், இராமநாதபுரம், இராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருவாரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 24 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 8.33 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 50 புதிய மற்றும் கூடுதல் வகுப்பறைகள்;

என மொத்தம் 21 மாவட்டங்களிலுள்ள 195 பள்ளிகளில் 64.44 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 400 வகுப்பறைக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**புதிதாகக் கட்டப்பட்டுள்ள 9 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல்**

ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி போன்ற பல்வேறு அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரி ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு விண்ணப்பிக்க வருகை தரும் பொது மக்களின் வசதிக்காகவும், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் நல்ல காற்றோட்டமான அலுவலக சூழலில் பணியாற்ற ஏதுவாகவும், பழைய பழுதடைந்த கட்டடங்களுக்குப் பதிலாக புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் 2008ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசால் முதன்முறை யாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, தற்போது வரை 314 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, அதில் 274 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியின் மூலம் கோயம்புத்தூர் மாவட்டம் மதுக்கரை, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம், விருதுநகர் மாவட்டம் - இராஜபாளையம், இராணிப்பேட்டை மாவட்டம் - திமிரி, தென்காசி மாவட்டம் - குருவிகுளம், திருவாரூர் மாவட்டம் கோட்டூர், நீடாமங்கலம், திருவாரூர் மற்றும் முத்துப்பேட்டை ஆகிய இடங்களில் 35 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 95 வாகனங்களை வழங்குதல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 2024-25 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கள அலுவலர்கள், துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் பணிகளின் தரத்தை கண்காணிக்கவும் உரிய காலத்தில் முடித்திடுவதை உறுதி செய்யவும், கள ஆய்வு மேற்கொள்ளவும் புதிய வாகனங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செயற்பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள், உதவி செயற்பொறியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 8 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 95 வாகனங்களை வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களுக்கான சேவையினை முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இவ்வரசு பொறுப்பேற்றத்திலிருந்து இது நாள் வரை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக மொத்தம் 92 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 820 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**குடியரசுத் தலைவர் விருது பெற்ற ஊராட்சி மன்றத் தலைவர்கள் முதலமைச்சர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றனர்**

இந்திய அளவில் 2024ஆம் ஆண்டு உட்கட்டமைப்புகளில் தன்னிறைவு பெற்ற ஊராட்சியாக கோயம்புத்தூர் மாவட்டம், எஸ்.எஸ்.குளம் ஊராட்சி ஒன்றியம், கீரநத்தம் ஊராட்சி தேர்வு செய்யப்பட்டு முதல் பரிசுக்கான விருதும், மகளிருடன் நல்லிணக்கம் கொண்ட ஊராட்சியாக தென்காசி மாவட்டம், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், வரகனூர் ஊராட்சி தேர்வு செய்யப்பட்டு மூன்றாம் பரிசுக்கான விருதும் இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் புதுதில்லியில் 11.12.2024 அன்று வழங்கப்பட்டது.

இவ்விருதுகளை பெற்ற கீரநத்தம் ஊராட்சிமன்ற தலைவர் ரா.பழனிசாமி மற்றும் வரகனூர் ஊராட்சிமன்ற தலைவர் திருமதி.ம.சுப்புலட்சுமி ஆகியோர் முதலமைச்சர் அவர்களை இன்றையதினம் தலைமைச் செயலகத்தில் சந்தித்து, விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பொங்கல் திருநாளில் தேர்வுகள் நடத்துவதா?

## தேசிய தேர்வு முகமை நடத்தும் யு.ஜி.சி. நெட் தேர்வு தேதிகளை மாற்றிடுக!

### உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் – ஒன்றிய கல்வி அமைச்சருக்கு கடிதம்!

சென்னை, டிச. 24–

**ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய தேர்வு முகமை (NTA) அதன் UGC NET தேர்வை பொங்கல் திருநாள் நாட்களில் நடத்தப்படுவதை மாற்றியமைத்திட வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ஒன்றிய கல்வி அமைச்சர் அவர்களுக்கு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் கடிதம் எழுதியுள்ளார்.**



இக்கடிதத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளதாவது:

ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய தேர்வு முகமை (NTA) அதன் UGC - NET தேர்வை 3 ஜனவரி 2025 முதல் 16 ஜனவரி 2025 வரை நடத்தஅறிவித்துள்ளது.

உலகம் முழுவதும் உள்ள அனைத்துத் தமிழ் சமுதாய மக்களாலும் கொண்டாடப்படும்விழா பொங்கல் திருநாள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த விழா ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 13 முதல் ஜனவரி 16 வரை நான்கு நாட்கள் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு 2025, 13 ஆம் தேதி போகி பண்டிகையும், 14 ஆம் தேதி பொங்கல் (தமிழ்ப் புத்தாண்டு) பண்டிகையும், ஜனவரி 15 ஆம் தேதி திருவள்ளுவர் தினமாகவும் (மாட்டுப் பொங்கல்) ஜனவரி 16 ஆம் தேதிஉழவர் திருநாள் / காணும் பொங்கலாகவும் கொண்டாடப்படுகிறது.

**3000 ஆண்டுகளுக்கும் மேலான கலாச்சாரம்!**

இந்த நான்கு நாட்களும் உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் பொங்கல் திருநாளை உற்சாகத்துடன் கொண்டாடி மகிழ்வார்கள். இந்த விழாவை முன்னிட்டு தமிழக அரசு ஏற்கனவே 2025 ஜனவரி 14 முதல் 16 வரை விடுமுறை அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டு விவசாயிகளின் உணர்வார்ந்த திருநாளாகக் கொண் டாடப்படும் பொங்கல் ஒரு பண்டிகை மட்டுமல்ல, 3,000 ஆண்டுகளுக்கும் மேலான தமிழர்களின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் அடையாளமாகும்.

பொங்கல் திருநாளைப் போலவே ஆந்திரா மற்றும் தெலுங்கானாவிலும் மகர சங்கராந்தி விழா ஜனவரி மாதத்தில் கொண்டாடப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொங்கல் விடுமுறை நாட்களில் நெட் தேர்வு நடத்தப்பட்டால், மாணாக்கர்கள் இத்தேர்வுக்கு தயாராவதற்கும் எழுதுவதற்கும் தடை ஏற்படும்.

மக்களவை உறுப்பினர் சு.வெங்கடேசன் விடுத்த வேண்டு கோளின்படி, பொங்கல் திருநாளை முன்னிட்டு, ஜனவரி 2025க்கான பட்டயக் கணக்காளர்கள் அறக்கட்டளைத் தேர்வு மாற்றியமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

எனவே, தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் உள்ள மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் பாதிக்கப்படுவதை தவிர்த்திடும் வகையில் பொங்கல் திருநாள் விடுமுறை நாட்களில்நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள யுஜிசி நெட் தேர்வு மற்றும் பிற தேர்வுகளை வேறு தேதிகளில் நடத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு, ஒன்றிய கல்வி அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, பூண்டி ஒன்றியம், அனந்தேரி ஊராட்சியில் குழந்தை நேய வகுப்பறை புதிய பள்ளி கட்டிடம் கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் பூண்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் டி.கே. சந்திரசேகர், அபிராமி குமரவேல், அப்துல்ரஷீத், ஜி.சுதாகர், பி..சிவய்யா, தாமோதரன், காண்டீபன், டி.ராஜேஷ், டி.வி.புரம்.சீனிவாசன், ரகு, பாஸ்கர், கோல்டு.மணி சாந்தகுமார். சலபதிகேசவன், நளாயினி, டார்லிங் ராஜா, என்.எம்.சுப்பிரமணி, கே.பாபு, சித்ராபாபு, வி.சுரேஷ், கிளை நிர்வாகிகள் ஏழுமலை, தினேஷ், ராமன், ராமமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### கு.புகழ்வேந்தன் நிகழ்ச்சி ஏற்பாடு! து.பிரபு தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி – வழக்கறிஞர் ஸ்ரீதரன் முன்னிலை!

## சைதை மேற்கு - 140வது வட்ட இளைஞரணி சார்பில் தெருமுனைக் கூட்டம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் – தமிழ் கொண்டான் – பேனா தெய்வம் சிறப்புரை!

சென்னை, டிச.24-

சைதை மேற்குப் பகுதி 140வது வட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்ததின விழா - உதயநாள் விழா- கழக அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் இன்று (24.12.2024, செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு ஆதிகேசவப் பெருமாள் கோயில் தெரு, திருவள்ளுவர் படிப்பகம் அருகில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு 140வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் து.பிரபு தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கவிதா கௌதமன், சைதை த.சம்பத், ந.தமிழரசு, சைதை வி.பாபு, சைதை ஆர். ரவி, வழக்கறிஞர் த.பாபு, எம். சுரேஷ்குமார், க.பிரஸ்மணி, லால் மனோகரன், எஸ்.மணிவண்ணன், எம்.வளர்மதி, ஆ. கவிராஜ், எம்.அய்யாவு, ஆர். பன்னீர், கே.ஞானம், இ. பாண்டுரங்கன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் தமிழ் கொண்டான், பேனா தெய்வம் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், ஏ.எம்.வி. பிரபாகரராஜா எம்.எல்.ஏ., எஸ்.குணசேகரன், பரிதி இளம் சுருதி எம்.சி., சைதை மா.அன்பரசன், களக்காடி எல்லப்பன், வி.பி. ஜானகிராமன், ஆர்.ரமேஷ், சை.மு.சேகர், எஸ்.பி. கோதண்டம், எம்.நாகா, அட்கோ கமலநாதன், சைதை சாதிக், ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், அஞ்சலராமன், எம்.எஸ்.ஹரிபாபு, டி.என்.சிவமணி, கிண்டி ஆர். எல்.செல்வம், கே.ராமச்சந்திரன், பொன். ஜெய்சிங், வீ. மதிவாணன், பாஸ்கர் ஆ.ரவி, வி.மனோகரன், சைதை ஆர். ஜெகன்நாதன், தென்றல் தினேஷ், கு.கௌரி, சைதை எஸ்.பஷீர், எல்.டி.எப். துளசி, பி.கமல் சங்கர், எஸ். சரவணன், பிரஸ் விஜி மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

பா.ரிச்சஸ்ட், பி.சந்தோஷ் குமார், எம்.பார்த்திபன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

மாவட்டப் பிரதிநிதி அய்யன் திருவள்ளுவர் படிப்பகம் நிறுவனர் கு.புகழ்வேந்தன் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்துள்ளார்.



மனித நேய உதய நாள், சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் தெற்கு பகுதி 75அ வட்டத்தில் தொடர் நான்காம் நிகழ்ச்சி 222 விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் மகளிருக்கு சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இந்நிகழ்வில் சென்னை மாநகர மேயர் பிரியாராஜன். கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. திரு.வி.க.நகர் தெற்கு பகுதி செயலாளர், எம்.சாமிகண்ணு, தண்டலம் என். கிருஷ்ணமூர்த்தி, எம்.எஸ்.மைனர் பாபு ஏற்பாட்டில் ஏ.குணசேகரன் தலைமையில், பி.ஜே.துளசிங்கம், இரா.வீரமணி, எம்.பெரோஸ்கான், க.ராஜ்முகமது வட்ட செயலாளர்கள் வி.க.வெங்கடேசன், எம்.தமீம், எஸ்.சசிகுமார், எஸ். வெங்கடேசன், பொல்லு (ஏ) டி.சுரேஷ்குமார், பி.சுகுமார், த.கருணாநிதி, வனஜா சண்முகம், கி.நாகலிங்கம், இரா.புருஷோத்தமன், எல்.சுப்பிரமணி, வே.து.தாமரைச்செல்வன். மெடிக்கல் கே.ஆர்.சதீஷ், வெல்டிங் எஸ்.பாபு, மாவட்ட நிர்வாகிகள் பகுதி நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் மற்றும் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.